★ விலை ரூபா 1-00

ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)
மலர் 25 ஆடி 14 ஷவ்வா 19 இதழ் 168
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 30—7—83

# 2-வது அகதிகள் கப்பல்
## 3000 பேருடன் இன்று புறப்படுகிறது

(கொழும்பு)

**கொழும்பிலிருந்து இரண்டாவது அகதிகள் கப்பல் இன்று புறப்படுகிறது. இந்தக் கப்பலில் மூவாயிரம் அகதிகள் வருகிறார்கள்.**

'லங்கா கல்யாணி' என்ற கப்பலில் மூவாயிரம் அகதிகளும் இலவசமாக வருவதற்கான ஏற்பாடுகளை ஜெயபாலசிங்கம் கம்பனி நிறுவனத்தினர் செய்துள்ளனர்.

மூவாயிரம் அகதிகள் மிகப் பத்திரமாக வருவதற்கான ஏற்பாடுகளை யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், உதவிப் பொது முகாமையாளர் எஸ். அந்தோனிப்பிள்ளை ஆகியோரும்செய்துள்ளனர்.

இந்த அகதிகள் கப்பலும் காங்கேசன்துறை லங்கா சிமெந்து துடறமுகத்துக்கு திங்கட்கிழமை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுமுடித்துள்ளனர்.

### மாவு, சீனி விநியோகம்

மாவு, சீனி ஏற்றிவந்த கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தில் தங்கியுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நேரடியாக இவை விநியோகிக்கப்பட்டது. இறக்குமதி வேலைகளை ஜெயபாலசிங்கம் கம்பெனி பொறுப்பேற்றிருந்தது.

உடனடியாக இவை விநியோகிக்கப்பட்டதால், மக்கள் பிரச்னையை ஓரளவு தீர்க்கக் கூடியதாக இருந்தது.

# முதலாவது அகதிகள் கப்பல் நாளை யாழ். வருகிறது!

### கொழும்பில் குமார்

(கொழும்பு)

தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் கொழும்பில் தங்கியிருப்பதாக கடைசியாக கிடைத்த தகவல் தெரிவிக்கிறது.

## காங்கேசன் துறைமுகத்தில் இறங்குவதற்கு ஏற்பாடு

[கொழும்பு]

**கொழும்பு முகாம்களில் தங்கியிருக்கும் 35,000 தமிழ் அகதிகளில் 300 பேரை ஏற்றிக்கொண்டு, 'மேர்ஸ்க்செரண்டிப்' என்ற கப்பல் நேற்றுக்காலை பதினொரு மணியளவில் வடபகுதி நோக்கிப் புறப்பட்டது. இக் கப்பல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை காங்கேசன்துறை லங்கா சிமெந்து துறைமுகத்தைப் போய்ச்சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

யாழ்ப்பாணம் வந்து சேரவிருக்கும் தமிழ் அகதிகளுக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்வதற்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஏற்பாடுகள் செய்துள்ளார்.

சிலோன் ஷிப்பிங் நிறுவன தலைவர் திரு. ராஜவீரசிங்க, பொதுமுகாமையாளர் திரு. காமினி பெல்பொல, கப்பல் ஏஜண்ட் திரு. கே. ஜெயபாலசிங்கம் ஆகியோர் இக் கப்பல் சேவைக்கு ஏற்பாடு செய்துள்ளனர்,

கப்பல்சேவை இலவசமாக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

கப்பலிலிருந்து கரைக்கு அகதிகளை கொண்டுவருவதற்கான சகல ஏற்பாடுகளையும் ஜெயபாலசிங்கம் கம்பனியார் செய்துள்ளனர்.

அகதிகள், யாழ்ப்பாணத்தில் தங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவருகிறது.

கப்பலில் வரும் அகதிகளை, யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்வதற்கு பஸ் ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவருகிறது.

## கொழும்பில் இந்திய வெளிநாட்டு அமைச்சர்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. நரசிம்மராவ் இந்திய விசேட விமானத்தில் கடந்த வியாழன் இரவு கொழும்பு வந்துசேர்ந்தார்.

அவருடன் ஆறு அதிகாரிகளைக் கொண்ட குழுவும் வந்து சேர்ந்துள்ளது.

ஜனாதிபதி திரு. ஜே, ஆர். ஜயவர்த்தனவுடனும், வெளிநாட்டு அமைச்சர் ஜனுப் ஹமீதுடனும் நேற்று பேச்சுவார்த்தைகளை அவர் நடத்தினார்.

## வன்செயல் சம்பவங்கள் அமைச்சரவை ஆராய்ந்தது!

(கொழும்பு)

கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் நடைபெற்றுள்ள வன்செயல் சம்பவங்கள் பற்றி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் விசேடமாக ஆராயப்பட்டது.

வன்செயலால் பாதிக்கப்பட்டு அல்லது இருப்பிடங்களை இழந்துள்ள மக்களின் சேவை நலனுக்காகவும் அத்தியாவசிய உணவுபொருட்கள் விநியோகம் தொடர்பாகவும், செய்யப்படவேண்டிய ஏற்பாடுகள் பற்றி அங்கு தீர்மானிக்கப்பட்டது.

தீவைப்பு, கொள்ளையடித்தல் நன்கு திட்டமிடப்பட்டு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரவை கூட்டத்தில் எடுத்துக்கூறப்பட்டது.

### செய்தித் தணிக்கை அமுல்

கடந்த புதன்கிழமை 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

## 'யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள் அனுப்புக!'
### அரசாங்க அதிபர் அவசரவேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு பெற்றோல், மண்ணெண்ணை, டீசல் ஆகியவற்றை உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா அவசர வேண்டுகோள்விடுத்தார்.

எரிபொருட்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு பல தடவை வேண்டுகோள் விடுக்கப்பட்டும் இதுவரை அனுப்பிவைக்கப்படவில்லை.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச், முகம்மது, பெட்றோலியம் கூட்டுத்தாபனத் தலைவர், பாதுகாப்பு அமைச்சுக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் மீண்டும் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

### கொழும்பில்
## 17 கைத்தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டுள்ளன!

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் புதிதாக எவ்வித பயங்கரவாத சம்பவங்களும் இடம் பெறவில்லையென ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. டக்ளஸ் லியனகே, செய்தி நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

கொழும்பில் 17கைத்தொழிற்சாலைகள் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் கூறினார். புடவைகள் உற்பத்தி நெசவுத் தொழில் ஏற்றுமதிப் பெருட்கள், தொழிற்சாலைகளே அழிக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் கூறினார். இதனால் இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### இலங்கை நிலைமை
## ஜனாதிபதியுடன் பாரதபிரதமர் தொலைபேசியில் தொடர்பு

(கொழும்பு)

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு இலங்கையில் ஏற்பட்ட நிலமை பற்றி ஆழ்ந்தகவலை தெரிவித்தார். தமிழ் மக்கள் கொலை செய்யப்படுவதாக கிடைத்த தகவல் அதிர்ச்சியும் விசேட கரிசனையும் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் இந்த விவகாரம் குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளதாக

(2-ம் பக்கம் பார்க்க)

# வெலிக்கடைச் சிறையில் மேலும் 17கைதிகள் கொலை!
## 36 கைதிகள் வேறு சிறைக்கு மாற்றம்

(கொழும்பு)

வெலிக்கடைசிறைச்சாலையில் மேலும் 17 கைதிகள் நேற்று முன்தினம் ஏற்பட்ட கலவரத்தில் உயிரிழந்தனர். இச் சம்பவம் தொடர்பாக நேற்று நீதிவிசாரணை நடைபெற்றது.

வெலிக்கடை சிறையில் இம் மாதம் 26 ம் திகதி, பயங்கரவாததடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 35 தமிழ் கைதிகள் கொல்லப்பட்டதையடுத்து அங்கு எஞ்சியிருந்த தமிழ்க் கைதிகளை வேறுஒரு சிறைச்சாலைக்கு மாற்ற முடிவுசெய்யப்பட்டது. ஆனால் இந்த முடிவு அமுல் செய்யப்படுவதற்கு முன்னர் நேற்று முன்தினம் மீண்டும் ஒரு கலவரம் ஏற்பட்டது. இதில் 17 கைதிகள் உயிரிழந்தனர் என்று ராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் மேலும் பலர் காயமடைந்துள்ளார்கள். இருவரின் நிலைமை மிக மோசமாகவுள்ளது.

கலவரம் ஏற்பட்டதும்

(2-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலைமையில் வேலை செய்துகொண்டிருக்கும் பெரிய எலக்ரோலக்ஸ் (Electrolux) குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8071, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 8071

## வாடகைக்கு

இல. 133, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் / கட்டப்படவிருக்கும் கடைகள் வாடகைக்குத் தேவைப்படுவோர் உடனடியாகப் பதிவு செய்துகொள்ளவும். விபரங்களுக்கு; முகாமையாளர், சி. எஸ். கே. ஸ்தாபனம், 133, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம். 8072

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
பருத்தித்துறை

தொண்டமனுற்றைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா கிருஷ்ணசாமியின் மரணசாதனத்தை நிறைவேற்றுதல் விடயமாக.

1. இராசா இராசமணி
2. பெண் நாகேஸ்வரி- இருவரும் நடுத்தெரு தொண்டமனுறு.

மனுதார்கள்

தத்துவ நியாயாதிக்க)
இலக்கம்: 1154 ) -எதிர்

1. இராசா இராசமணி மகன் கிருஷ்ணகுமார் நடுத்தெரு- தொண்டமனுறு தமது வழக்குப் பாதுகாவலன் (பராயமற்றவர்)
2. ஏ. தியாகராசா பழைய பாலத்தெரு தொண்டமனுறு-மூலம் எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு புரட்டாசி மாதம் 9ம் தேதி முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறுபதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் ஏதுமிருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
**க. செல்வராசா,**
பதிவாளர்.

வரைவு:
மனுதார்களின்
சட்டத்தரணி.
1982ம் ஆண்டுஐப்பசிமாதம் 27ம் தேதியன்று.

8058

## உற்சவம் பின்போடப்பட்டது

[யாழ்ப்பாணம்[

எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருந்த வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் தேவி மகோற்சவம் பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [அ]

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## மட்டக்களப்பில் 30 கைதிகள்

(மட்டக்களப்பு)

கொழும்பில் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளில் 30 பேர் மட்டக்களப்புக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக

## ஆங்கில வகுப்புகள் பின்போடப்பட்டது!

[கொழும்பு]

பல்கலைக்கழகங்களுக்கும், பல்கலைக்கழக கல்லூரிகளுக்கும் அனுமதிபெற்றுள்ள மாணவர்களுக்கு அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடைபெறவிருந்த ஆங்கில வகுப்புக்கள் பின்போடப்பட்டுள்ளன.

மறு அறிவித்தல் கொடுக்கப்படும் வரை மாணவர்கள் எவரையும் பல்கலைக்கழகத்திற்கு வரவேண்டாமென பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் கேட்டுள்ளார். [க]

சாவகச்சேரி மாவட்டநீதிமன்ற

## விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: ஈடு 6016

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு, சின்னத்தம்பி கந்தையா
பிரதிவாதி வாதி

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு
(1) சின்னப்பொடியன் தம்புவும், பெண்
(2) சின்னக்கிளி.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு 6016ல் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 19-08-83 வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் என்னுல் இக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த பிரதிவாதி, வாதிக்கு ரூபா3404/-வும்மேலும் ரூபா 2800/- வருட மொன்றுக்கு 36% வட்டியும், 1981ம் ஆண்டு சித்திரை மாதம் 22ந் திகதியிலிருந்து, தீர்வைத் திகதியாகிய 1981ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30ந் திகதி வரையுமான வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும், இறுக்கப்படும்வரை நூற்றுக்கு 12% வட்டியும் வழக்குச் செலவு 1904/70, நடைபெற்ற செலவு ரூபா 1203/10 நடைபெற வேண்டிய செலவு 701/60 சதமும் மேலதிக செலவும்.

(1) தீர்வைத் தொகையில் 25-06-81ல் எதிராளிகளால் செலுத்தப்பட்ட ரூபா 2900/-
(2) வழக்குச் செலவின் கணக்கால் ரூபா 100/- கழிக்கும் படியும்.

### காணிகள் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று மட்டுவில் தெற்கு இறைகொட்டடி வளவு நிலப்பரப்பு 12 பதிவு எவ் 270/239 அளவின் படியும், ஆட்சிப்படியும் நில பரப்பு 11 குளி 11 இதில் வடக்குப்பக்கமாக நில. பர. 5 குளி 14½ போக மிகுதி தெற்குப் பக்கமாக நில. பர. 5 குளி 15½ இதில் கிழக்குப் பக்கமாக வடக்கெல்லைக் காணிக்கு ஒழுங்கைக்கு குளி 4 போக மிகுதி நிலப்பரப்பு 5 குளி 10½ இந்தப் பரப்பு ஐந்து குளி பத்தரைக்கு எல்லை புதிதாக வடக்கெல்லைக் காணிக்கு விடப்பட்ட எட்டு அடி அகலமான ஒழுங்கை வடக்கு மயில்வாகனம் பெண் இந்தினமலருக்குரிய வாதனம், மேற்கு இளையதம்பி மகள் செல்லம்மா, தற்போது நல்லதம்பி அப்பையாவுக்குரிய ஆதனம். தெற்கு சின்னத்தம்பி நடராசாவுக்கும் வேலுப்பிள்ளை சண்முகத்துக்குரிய ஆதனங்கள் இவ்வெல்லைக் காணி அடங்கலும், இதைச் சேர்ந்தவைகளனைத்தும்.

பதிவு இல: எவ் 553/ 100

**ப. ரஜனி**
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,

சாவகச்சேரி
20-7-83

8094

## அகதிகளுக்கு சிகிச்சைவழங்க அமைச்சர் ஏற்பாடு

(கொழும்பு)

போதனு வைத்தியசாலைகளுக்கு பொறுப்பான அமைச்சர் திருமதி சுனேத்திரா ரணசிங்கா பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுவரும்பலவைத்தியசாலைகளுக்கு நேரில் விஜயம்செய்து நிலைமையைப்பார்வையிட்டார்.

வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட வைத்தியர் குழுக்களை ஏற்படுத்தியிருப்பதாகவும், அகதிகளுக்கு உணவு முதலியவற்றை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு பொரியாஸ் பத்திரியிலும், மற்றும் ஆஸ்பத்திரியிலும், பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டுவருகிறது.

## கொள்ளை லாப வர்த்தகர் மீது நடவடிக்கை

(கொழும்பு)

பொருட்கள் விற்பனையின் கொள்ளை லாபம் அடிக்கும் வர்த்தகர்கள், வியாபாரிகள் மீது பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே சில வர்த்தகர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அறிவித்தல்

தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக 'ஈழநாடு' பத்திரிகை பிரசுரிப்பதிலும் விநியோகிப்பதிலும் தாமதங்கள் ஏற்பட்டுள்ளது. இதனை வாசக அன்பர்களும் விளம்பரதாரர்களும் பொறுத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- நிர்வாகி

## அகதிகள் முகாம்கள்

[கொழும்பு]

கொழும்பிலுள்ள அகதிகள் முகாம்களில் ஏறத்தாழ 35,000 அகதிகள் கஷ்டத்துடன் ஆனுல் பாதுகாப்பாக இருக்கிறுர்கள். இவர்களுக்கு உணவு முதலியவற்றைவழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முகாம்களில் வசதி குறைவாக இருந்தாலும் அகதிகள் அங்கு சென்று வேறு ஏற்பாடு செய்யும் வரை தங்கியிருப்பதே மேலானது என ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## வெலிக்கடைச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலை அதிகாரிகள் ஆயுதப் படையினரின் உதவியை நாடினுர்கள். அவர்கள் வந்து கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து கலவரத்தில் ஈடுபட்ட கைதிகளை அவர்களின் கூண்டுக்குள் துரத்திவிடும் முயற்சியில் வெற்றிபெற்றுர்கள்.

பின்னர் வெலிக்கடைசிறைச்சாலையிலும் வேறு சிறைச்சாலையிலும் இருந்து 36 கைதிகள் இன்னுமொரு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

மரணமானவர்கள் சம்பந்தமான நீதி விசாரணை மறுநாள் காலை 9 மணிக்கு ஆரம்பமானது. [க]

## ஜனுதிபதியுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த இலங்கை ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு தாமும் இந்த அசம்பாவிதங்கள் குறித்து ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக சொன்னுர். வன்செயலை தடுத்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர தன்னுல் இயன்றளவு நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்துள்ளதாக கூறினுர்.

அகதிகளுக்கு வழங்குவதற்கு உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்கள் தேவைப்பட்டால் அரசாங்கத்தின் மூலம் தொண்டர் நிறுவனங்கள் மூலம் வழங்குவதற்கு இந்தியா ஆயத்தமாக இருப்பதாக திருமதி. இந்திராகாந்தி தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு இந்தியப் பிரதமருக்கு நன்றி தெரித்ததுடன்,உதவிதேவைப்பட்டால் அதுபற்றி கூறுவதாகவும் சொன்னுர்.

இந்திய வெளிநாட்டமைச்சரை பேச்சுவார்த்தைக்காக இலங்கைக்கு அனுப்பலாமா? என்றுஇந்தியப்பிரதமர் கேட்டபோது, ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு அதற்கு இணக்கம் தெரித்தார்.

உ

# தமிழர் நிதியம்

கஷ்ட சூழ்நிலையில் உடனடிப் பண உதவி வேண்டுவோர்
தமது
**வைரம்; தங்கம்; வெள்ளி; பெறுமதிப் பொருட்களை**
எமது
**"வங்கி பெட்டக பாதுகாப்பு திட்டம்"**
மூலம் வைப்பிட்டு அப்பொருட்களுக்கு எதிராக கணிசமான
**"கடன் உதவி"**
பெற வழி செய்யப்பட்டுள்ளது.

**வாடிக்கையாளரின் நலனை முன்னிட்டு பிரதிதினம் காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில் நிறுவன அலுவலகம் இயங்கும். பக்க வாசல் மூலம் தொடர்பு கொண்டு தங்கள் வைப்பீடு; முதல், வட்டி, கடன் வசதிகளை செய்யவும்.**

1-8-83 நடைபெறவிருந்த தங்க சுரங்கம் அதிஷ்டலாப பரிசு சீட்டிழுப்பு; 20-8-83 நடைபெறவிருந்த சீட்டு பிரிவுகளின் ஏலம் ஆகியன மறு அறிவித்தல் வரை ஒத்திப்போடப்பட்டுள்ளன.

மேலதிக விபரங்கட்கு :

**"தமிழர் நிதியம் நிதி நிறுவனம்"**
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(மனேகரா சினிமா அருகில்)
தொலைபேசி : 22437

## மணிவாக்கு

அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண்டாரும் — வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்திற் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற் பாற்றன்று.

— நாலடியார்

# நமது நோக்கு

## வரலாறு வரையப்படுகிறது

மனிதன் உணவால் மட்டுமே வாழ்பவன் அல்ல. மட்டுமேஎன்பதனுல் உணவு அத்தியாவசியம் என்பது தெளிவு. அதனை விரிக்க இன்று அவசியமில்லை.

வாழ்வில் வரும் துயர்களைப் போக்கிவிட வரும் இன்பங்களைத் தாங்கிட இறைவனது நினைவாலும் வாழ்கிறான்.

அதுவே மண்ணில் நல்ல வண்ணம் வாழும் வழி.

ஆனுல் நினைப்பதெல்லாம் அப்படியே நடந்துவிடுவதில்லை; எதிர்பாராதவிளைவுகளே வரலாற்றின் உள்ளுடன்; இதனை உருவாக்குவதற்கு மகாத்மாகாந்தியாகிய அஹிம்சாமூர்த்தியேவன்செயல்களை முற்றுகத் தடுத்துவிட முடியவில்லை. இருந்தும் ஆங்கில ஆட்சியின் அதிகாரம் மண் கவ்வியது.

ஒருகணப்பொழுதில் இந்த நாட்டின் சரித்திர காலத்துக்கு அப்பாற்பட்ட ஆதிகாலத்திலிருந்து வாழ்ந்துவரும் தமிழ்இனத்தின் 35,000 பேர் இன்று அகதிகளாகமாறிகொழும்பு முகாம்களில்அடைபட்டிருக்கின்றனர். அவர்கள் கதியற்றவர்களென்றதையே அச்சொல் குறிக்கிறது.

மேன்மை தங்கிய இலங்கை ஜனுதிபதி திரு. ஜெயவர்த்தனு நாட்டுமக்களுக்கு அளித்த செய்தியில், நூற்றுக்கணக்கான அரசியல் வாதிகளும், பொலிஸ் அதிகாரிகளும் வடபகுதி பயங்கரவாதிகளால் கொல்லப் பட்டதால் இந்த நிலைமை ஏற்பட்டதென்றுர்; இன்றைய நிலைமைக்கு அவர் கவலை தெரிவித்ததோடு முக்கியமாக பிரிவினை கோரும் அரசியல்வாதிகள், கட்சிகள் தடைசெய்யப்படுமென்ற அமைச்சரவை முடிவை மக்களுக்குஅறிவித்திருக்கிறுர்.

குக் காரணமாயிருந்தது.

நேரில் கண்டு கிரகித்து தக்க ஆலோசனைகளையும் நடவடிக்கைகளையும் உதவ தம் வெளிநாட்டு அமைச்சர் திரு. நரசிம்மராவை விசேட விமானத்தில் அனுப்பியிருக்கிறுர்.

அவருடைய வருகை இந்திராவின் வருகை போன்றது; இந்தியாவின் வருகைபோன்றது.

இலங்கை வாழ் தமிழர்கள வந்தேறு குடிகள் அல்ல, தாய் நாட்டின் பரம்பரையினர் சேய்நாட்டின் தேசிய இனம் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

அவதூருக எழுதியும் பேசியும் வரும் இந்நாட்டின் தரமற்ற நாளேடுகள். இந்தியா, உலகில் முதலாவது பெரிய ஜனநாயகநாடு என்பதையும் இந்திரா உலகில் அதிகாரம்மிக்க முதற் பெண்மணி என்பதையும் அறியாத பத்திரிகைப் பதர்கள் இன்றுவது இதனை உணரட்டும்.

இன்றைய அவலநிலையில் அப்பத்திரிகைகள் அடிப்படை உண்மைகளை உணர அரிய சந்தர்ப்பம் உண்டு அவ்வுணர்சிநாட்டின்பொறுப்புள்ள பத்திரிகை சேவைக்கு மிக அவசியம்.

முகாம்களில் இருப்பவர்கள் அகதிகள் என்றுல், வெளியில் வாழ்பவர்களும் அந்தநிலையே; தத்துவ உணர்வுடைய சான்றேர் வாழ்வே ஒரு தற்காலிக முகாம் வாழ்வு ஒரு சிறைச் சாலையென்கின்றனர் அதனை நன்றுக ரசிக்கும் நிலையில் இலங்கை தமிழ் மக்கள் இன்று வாழ்கின்றனர்.

இருப்பினும் இலங்கை வெலிக்கடைச்சிறைச் சாலையில் சட்டத்தின் நீதியைக் காத்திருந்த 52 பேர்கள் கொல்லப்பட்ட சம்பவம் உலக சரித்திரத்தில் என்றும் இடம்பெருத கோர நிகழ்ச்சி

### தணிக்கை

இருப்பினும் இது உள்ளூர்ப் பிரச்னையென்று,

தணிக்கை

இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதோடு அவர்களின் குடும்பங்களுககு ஆழ்ந்த அனுதாபங்கள்.

### தணிக்கை

அவை விரைவில் குணமடைய இடமுண்டெனவும் நம்பிக்கை பிறக்கிறது; இந்தியப் பிரதமர் வேண்டிய உதவி வழங்கவும் முன் வந்திருக்கிறுர்.

இந்தியப் பிரதமருக்கு இந்த நாட்டின் அதிகாரிகளிலும் பார்க்க இன்றைய இலங்கை நிலைபற்றி கூடிய விளக்கம் இருப்பதாகத் தெரிகிறது; தமிழகம் அதற்

மனத்தளர்ச்சியடையாது இனக்குரோதம் இந்த நாட்டின் வயதடைந்த நோய் என்பதை உணந்து 1956, தொடக்கம் 1958ல், 1961ல், 1977ல்1981ல்-இன்று 1983ல் தொடர்ந்து வரும் கொடுமைக்கு தலைவர்கள் வழிகாணமுடியாதிருக்கும் போது நாம் வணங்கும் தெய்வமே கண்திறக்க

வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேம்.

வரலாறு எழுதப்படுகிறது: விபரீதமெல்லாம் வெற்றியில் முடியுமென்பதே தெருள்நோக்குடையார் தெளிந்ததெளிவு.

## கும்பிடும் செல்வம் தரும்

# மாவை முருகன்

“தேடித் திரிவார் செல்வந் தருதெய்வம். சென்றவிடம்
வேடிக்கை கண்டவராக வேறென்ன கண்டிருந்தார்
மூடிக் கிடக்கும் மணிவாய் முகிழ்த்த நின் புன்முறுவல்
கோடிக்கணக்கில் கொடுக்கவும் கொள்ளார் குருடரன்றே.”

மாவைக் கந்தன் கோயில் வெளிமண்டபத்தே நின்று, ஆதிமூலத்துள் வரும் காட்சியைக் கண்களாற் பருகியவர், கந்தனின் வசப்பட்டு அருளில் மூழ்குவர். கொடித்தம்பத்தின் குறிக்கப்பட்ட உயரத்துக்கு நேரே, ஆதிமூலத்தின் பீடம் அமைந்திருக்கின்றது. இந்தத் தெய்வீக அமைப்பு, வேத சிவாமகங்களிற் குறிப்பிட்ட அமைப்புக்கு இம்மியும் பிசகாதது. அதனுல் முருகன் திருவுருவம், வேலின்ஒளி காண்பார்கள் மனத்திலேஒரு காந்த

— பண்டிதர் க. சச்சிதானந்தம் —

சக்தியைக் கிளர்த்தும். ஆதிமூல முருகனின் அருட்பார்வையிற் பட்டவர் மனம் கல்லானுலும், கசியும். வேறு சிந்தனைகளோடு வந்தவரும் முருகனின் அருளாகிய காந்த வலயத்தினுட்பட்டதும் கண்களையும் கருத்தையும் வேறெங்கும் செலுத்தமுடியாதவாறு கைகளைத் தலைமேற் குவிப்பர். மாவைப்பதியின் இந்த அற்புத சக்தியை அங்கு சென்றேர் அறிவர்.

மாவை முருகன் உருவம் வெளிவீதிவரும் போது முருகனின் மூடிய செவ்வாய் இதழ்களின் கோடியிலே ஒரு முகிழ்த்த புன்னகை அரும்புவதைக் கண்டார்க்கு வேறு செல்வங்களைக் கேட்க, மனம் வராது. ‘கும்பிடும் செல்வம்’ என்றெரு அழியாத செல்வம் இருக்கின்றது. அந்தப் புன்னகையின் வசப்பட்டார், கும்பிடும் செல்வத்தைப் பெறுவார். கவலை சொல்ல வந்தார் அதைமறப்பார், ஏதோ கேட்க வந்தார் அதை மறப்பார், ஆனுல் முருகனே அவரவர்க்கு எது உகந்ததோ அதை அருளுவான். சிலர் அறியாமையினுல் தமக்குப் பின்னர் துன்பமளிப்பவற்றையும் கேட்பர். முருகன் அவர்களுக்கு நல்லதைச் செய்வான்.

மாவை முருகன் திருவிழாவிற்குக் கைங்கரியம் செய்வோர் பாரம் பரியத்திலுலும் தூய்மையினுலும் தேர்ந்தெடுக்கப்பட்டோர் அதனுல் அடியார்கள் பத்தர்கள் கும்பிடுஞ் செல்வத்தைபெற, எல்லாரும் ஒரு முகமாக இயங்குவர். இங்கே நாதஸ்வரம் வாசிப்பவர்கள் அதற்கென நியமிக்கப்பட்டவர்கள். பத்தி ஒன்றையே கருத்தாகக் கொண்டு மல்லாரி வாசிக்க வேண்டிய இடத்தில் மல்லாரி வாசிப்பர். எந்த இராகம் கோவிலுக்குரியது என்பது அவர்களுக்குத் தெரியும். சுத்தமான தெய்வீக நாதசுர கானத்தைக் கேட்க வேண்டின், சுவாமி வெளிவீதிவரும்போதும் கேட்கலாம். அந்தக்கானம் பத்தியை வளர்ப்பதற்குரியது. அது போல அட்சரம் பிசகாத வேதவொலியை மாவிட்டபுரத்தில் கேட்கலாம். சுவாமியின் பின்னர் பாடுவார் ஆடுவார் பஜனை செய்வார் எழுப்பும் தேவாரப்பண் எவரையும் அந்தக்கூட்டத்திலே பாடுமாறு அழைக்கும் அற்புதமானது.

மாவிட்டபுரம் கந்தனிடம் வந்து செல்வோர், முற்றுக மனம் மாறிச் செல்வர். விரதம் பூண்டோர் மேலான ஆனந்தத்தை அனுபவிப்பர். கும்பிடும் செல்வத்தைத் தேட விரும்புவோர் மாவைக் கந்தன் சந்நிதியை நாடுவர்.

## மாவை. உற்சவம் தடையின்றி நடக்கிறது

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவம் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்தும் கூட மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. காலையும், மாலையும் சுவாமி வீதிவலம் வருகிறது.

10-ந் திருவிழாவான மஞ்சத் திருவிழாவும், 15-ம் திருவிழாவான கைலாசவாகன உற்சவமும் சிறப்பாக நடைபெற்றன.

எதிர்வரும் 3-ந் திகதி கார்த்திகை உற்சவமும், 5-ந் திகதி வேட்டைத் திருவிழாவும், 6 ந் திகதி பெரியசப்பரத் திருவிழாவும், 7-ந் திகதி இரதோற்சவமும், 8-ந் திகதி தீர்த்தோற்சவமும், 9-ந் திகதி மாம்பழத்திருவிழாவும் நடைபெறும்.

## குருப்பட்ட வைபவம்

(சுண்டிக்குளி)

புதிய மூன்று குருமார்களின் குருப்பட்ட வைபவம், யாழ், ஆசனக்கோவிலில் மிக அமைதியாக நடைபெற்றது. யாழ். ஆயர் அதி. வந், பீ. தியோகுப்பிள்ளை ஆண்டகை இதை நிறைவேற்றினுர்.

புதிய குருமாரின் சொந்த இடங்களில் நடைபெறவிருந்த வரவேற்புபசாரங்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

## நடமாட்டம் குறைவு

(சுண்டிக்குளி)

யாழ். நகரில் மக்கள் நடமாட்டம் நேற்றும் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

தனியார் பஸ்கள், மினிவான்கள் சேவையும் மிகக் குறைவாகவே நடைபெற்றது.

பல வியாபார நிறுவனங்களில் வியாபாரம் ஒற்றைக் கதவுகளில் நடைபெறுகின்றன. மக்கள் தட்டுப்பாடின்றிப் பொருட்களைப் பெறக்கூடியதாக இருக்கிறது. பாணுக்கு சில இடங்களில் கியூ வரிசை காணப்பட்டது.




வியாபாரிகளுக்கு கவர்ச்சியான கழிவு கொடுக்கப்படும்

| | | பெரியசைஸ் | நடுத்தரசைஸ் | சிறியசைஸ் |
|---|---|---|---|---|
| சுப்பர் | — | 14.90 | 12.90 | 10.90 |
| டீலக்ஸ் | — | 16.90 | 14.90 | 12.90 |
| ரோயல் | — | 22.90 | 20.90 | 17.90 |

ஜெனித் டிரேட்ஸ் லிமிடெட்



# “பிரிவினைகோரும் கட்சிகளுக்குத் தடை சட்டமூலம் வியாழன் தாக்கலாகும்!

## உறுப்பினர் குடியுரிமை இழப்பர்; பாராளுமன்றம் செல்ல முடியாது!!”

### நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி செய்தி

(கொழும்பு)

“பிரிவினை கோரும் கட்சிகளும் இயக்கங்களும் முற்ருகத் தடைசெய்யப்படும். அடுத்த வியாழக்கிழமை இதற்கான சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். பிரிவினை கோரும் கட்சிகள் தடை செய்யப்பட்டதும் அவற்றின் உறுப்பினர்கள் பாராளுமன்றம் செல்ல முடியாது. தடை செய்யப்பட்ட கட்சிகளின் உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் குடியுரிமை இழப்பார்கள். அவர்கள் பதவிகள் வகிக்கமுடியாது. எந்தவித உயர் தொழிலும் செய்யமுடியாது”.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, நாட்டு மக்களுக்கு நேற்றுமுன்தினமிரவு விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விடுத்துள்ள செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

நான் ஆழ்ந்த கவலையோடும் மனவேதனையோடும் உரை நிகழ்த்துகிறேன். என்னைச் சுற்றிலும் காணும் அழிவுகளையும் வன்செயல்களையும் உற்று நோக்கும்போது சொல்லொணு துயரமடைகிறேன். வன்செயல்கள் குறிப்பாக தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளாக சிங்கள மக்களுக்கும் தமிழ்மக்களுக்குமிடையே வளர்ந்துகொண்டு வந்த பகைமை உணர்வு சந்தேகம் ஆகியவற்றின் விளைவே இதுவாகும். நம்பிக்கையின்மை ஏற்படும்போதும், மனக்குறைகள் நிகழும்போதும் மக்களை வன்செயலில் ஈடுபடத் தூண்டி விடுவது எளிதாகும்.

மக்களின் நலனுக்கு இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் முன்னேற்றகரமான அரசியல் பொருளாதார நடவடிக்கைகளை சீர்குலைக்கும் நோக்கத்துடன்தான் இந்த வன்செயலை தூண்டி விடுவதற்கு பிரயத்தனம் செய்யப்பட்டுள்ளதாக கருதுகிருேம்.

தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்கிடையேயான இந்த சந்தேக உணர்வு 1956ம் ஆண்டிலேயே முதல் முதலில் ஆரம்பமானது. நமது தாய்த்திருநாட்டை ஐக்கிய இலங்கையை கூறுபோடுவதற்கான இயக்கமொன்று 1976ம் ஆண்டில் உருவானது. 2500 ஆண்டுகளாக ஐக்கியப்பட்டிருக்கும் இத்தேசத்தை பிரிப்பதற்கு சிங்கள மக்கள் ஒருபோதும் இணங்கமாட்டார்கள். ஆரம்பத்தில் இந்த பிரிவினை இயக்கம் அகிம்சை அடிப்படையிலேயே இருந்தது. ஆனுல் 1977ம் ஆண்டிலிருந்து இது ஒருவன்செயல் இயக்கமாக மாறியது. வன்செயல்கள் அதிகரித்தன. அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். வன்செயலுக்கான இந்த இயக்கத்துடன் ஒத்துப்போகாத ஆயுதப்படையினர் பொலிஸார், அரசியல் வாதிகள் ஆகியோர் சிங்களவராக இருந்தாலும் சரி, தமிழர்களாக இருந்தாலும் சரி கொலை செய்யப்பட்டனர்.

இக் காலகட்டத்தில் ஒரு சிலரல்ல, நூற்றுக்கணக்கானேர் செய்யப்படும் அளவிற்கு இந்த இயக்கம் வளர்ச்சியுற்றது. பயங்கரவாதிகளின் இத்தகைய வன்செயலினுல், சிங்கள மக்களும் எதிர் நடவடிக்கை எடுக்கத் தலைப்பட்டனர். இந்த பிரிவினை இயக்கம் மிக நீண்ட காலத்திற்கு முன்னதாகவே தடைசெய்யப்பட்டிருக்க வேண்டும் என்று நான்கருதுகின்றேன்.

இந்த இயக்கத்தை தடை செய்யாமல் விட்ட அரசாங்கங்களில்நானும் அங்கம் வகித்துள்ளேன்.

சில காலங்களுக்கு முன்னர் சர்வகட்சி மாநாடொன்றை கூட்டுவதற்கு நான் நடவடிக்கை எடுத்தபோது இவ் அரசியல் பிரச்னைகளுக்கு ஐ.தே. கட்சி 1977ம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் மூலம், தீர்வுகாண்பதுபற்றி தெரிவிக்கலாம் என எண்ணியிருந்தேன். இதனை செய்த பின்னர் பிரிவினை கோருவதை சட்டவிரோதமாக்குவதற்கு பொது அபிப்பிராயத்தை கோருவதென்றும் எண்ணியிருந்தேன். எனது அழைப்பை எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளாததால் முதலில் மாநாட்டை கூட்ட முடியவில்லை. வன்செயல்கள் ஊரடங்குச் சட்டம்காரணமாக இரண்டாவது முறையும் தடை ஏற்பட்டுள்ளது இதுமிகவும் துர்ப்பாக்கியமானது. எனினும், பிரிவினை கோரும் இயக்கத்தை மேலும் வளரவிடாமல் தடுக்கவேண்டுமென்ற சிங்கள மக்களின் கோரிக்கையையும் தேசிய உணர்வையும் ஏற்றுச் செயல்படவேண்டிய காலம் வந்துவிட்டதென்று அரசு தீர்மானித்துள்ளது.

நாட்டைப் பிரிக்கக் கோரும் கட்சியின் உறுப்பினர்களைப் பாராளுமன்றத்திற்கு வருவதைத் தடுக்கவும், பிரிவினை கோரும் கட்சிகளைச் சட்ட விரோதமாக்க அல்லது தடை செய்யவும் சட்டம் கொண்டுவரவேண்டுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கட்சிகள் தடைசெய்யப்பட்டதும், கட்சியின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கமுடியாது. இக்கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லது நாட்டின் பிரிவினைக்கு ஆதரவாக இருப்பவர்கள் குடியுரிமைகளை இழக்கவேண்டும். பதவிகளை வகிக்க முடியாது. உயர் தொழில்களைச் செய்ய முடியாது. இந்நாட்டிலுள்ள ஸ்தாபனங்கள் அல்லது இயக்கங்களில் சேர முடியாதென தடை கொண்டுவருவோம்.

இத்தகைய நடவடிக்கை எடுக்க நேர்ந்ததற்கு நாம் மிகவும் வேதனையடைகிருேம்.

நாடு பிரிக்கப்படுவதைத் தடுக்குமாறு சிங்கள மக்கள் விடுக்கும் வேண்டுகோளையும் அவர்களின் இயற்கையான விருப்பத்தையும் பூர்த்திசெய்து பிரிவினைபற்றிப் பேசுவோர் சட்டபூர்வமாகத் தமது நோக்கத்தை அடையத் தடுப்பதை உறுதிப்படுத்த வேறெந்த வழியும் இருப்பதாக எனக்கோ, எனது அரசாங்கத்திற்கோ தெரியவில்லை”.

(ந)

---




மற்றவைகளைவிட
மிகவும் மாறுபட்டது
புதிய சிங்கர்
சீலிங் விசிறிகள்
தரத்திற்கும் ஆற்றலுக்கும்
உலகப்புகழ்பெற்ற சிங்கர் என்ற
பெயர் போதுமானது.
சிங்கர் சீலிங் விசிறிகளுக்கு
விசேஷ அம்சங்கள்
ரோட்டரி ரிமோர்ட் ச்சோக் ரெகுலேட்டர்
மிகவும் குறைந்த மின் விரையம்.
சிங்கள் சீலிங் விசிறிகளுக்கு விற்பனைக்குப் பின் அற்புதமான
பராமரிப்புச் சேவையுண்டு.
சிங்கரின் சுலபான கட்டுத்தவணைத்திட்டத்தில் வாங்கலாம்
வாங்குவதற்கு உன்னதவழி.
விலை ரூ. 1725/-
சிங்கர் (இலங்கை) லிமிட்டெட்
SINGER SEWING MACHINES
SINGER


---

## பஸ், ரயில் பிரயாணிகள் குறைவு

(கொழும்பு)

கொழும்பில் பெரும்பாலான அலுவலகங்களும் தொழில் நிறுவனங்களும், நேற்று வெள்ளிக்கிழமை திறந்திருந்தன.

ஊழியர் வரவு மிகவும்குறைவாகவே இருந்தது. பஸ், ரயில் சேவை மிகவும் குறைவாக இருந்தது, பிரயாணிகளும், குறைவாகவே காணப்பட்டனர். மினி பஸ்களும் கொழும்பில் சேவையில் ஈடுபட்டிருந்தன.

---

## யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நலன்புரிச்சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நலன்புரிச்சங்கத்தின் வருடாந்தப்பொதுக்கூட்டம் மேல்நீதிமன்றத்தின் பகிரங்க மண்டபத்தில் தலைவர் திரு. வி. சி. பரமநாதன் தலைமையில் நடைபெற்றபோது நடப்பு ஆண்டின் புதிய உத்தியோகத்தர்களாகப்பின் வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வி. சி. பரமநாதன், உபதலைவர் திரு. அ. சிறில், செயலாளர் திரு. க. கோபாலபிள்ளை உபசெயலாளர் திரு. செ. தோ. ஞானேஸ்வரன், பொருளாளர் திரு. ஏ. பாலசிங்கம், உபபொருளாளர் செல்வி. மீனலோஜனி.

செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் கா. செல்வரத்தினம், இ. யோ. அரியரத்தினம், செல்வி செ. சாந்தினிதேவி, கணக்குப் பரிசோதகர்: திரு. கே. ஆனந்தராசா, பொழுதுபோக்குத் துறைச் செயலாளர்: திரு. எஸ். வைத்தியநாதபிள்ளை.

(மா)

---

## “இரத்தக்களரி ஏற்படுத்தி அப்பாவி மக்களின் உயிரை பலியாக்குவதினுல் பிரச்னை தீராது”

### இணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதமர்

(கொழும்பு)

இரத்தக் களரியை ஏற்படுத்துவதால் அல்லது அப்பாவி மக்களின் உயிரை பலியாக்குவதால் எவ்வித பிரச்னைக்கும் தீர்வுகாண முடியாது.

கொழும்பு மாவட்ட அமைச்சில் நடந்த இணைப்புக்குழுக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய பிரதமர் ஆர். பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினுர்.

அகதிகளுக்கானபுனர்வாழ்வு நடவடிக்கை, அத்தியாவசிய உணவு பொருட்கள்பற்றி ஆராய்வதற்கு கூட்டப்பட்ட இக்கூட்டத்தில் பிரதமர் பேசுகையில், உடமைகளுக்குசேதம் விளைவிப்பதை தடுக்கவும், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குமான சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படி கூட்டத்தில் கலந்துகொண்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் அகதிகள் புனர்வாழ்வு, அத்தியாவசிய உணவு பொருட்கள் விநியோகம் பற்றி பல தீர்மானங்கக நிறைவேற்றப்பட்டன. (ன்)

## "யாழ்ப்பாணத்தில் நிலைமை அமைதியாக இருக்கிறது"

### யாழ். அரசாங்க அதிபர் ஒலி. கூட்டுத்தாபனத்திற்கு தகவல்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில்இப்போது நிலைமை அமைதியாக இருக்கிறது. இப்போதைக்கு ஒரு பயங்கரவாத நிலைமை இங்கு இல்லை.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஒலிபரப்பு கூட்டுத்தாபன அலுவலக, நிருபருக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலையத்தை பயங்கரவாதிகள் தாக்கியுள்ளதாக வதந்தியொன்றும் நாட்டில் பரப்பப்பட்டுள்ளது. இந்த வதந்தியில் எவ்வித உண்மையும் கிடையாது. இது பற்றி அறிந்து கொள்வதாக ஒலி பரப்பு கூட்டுத்தாபன அலுவலக நிருபர், யாழ். அரசாங்க அதிபர் திரு. நேசையாவுடன் தொலைபேசியில் உரையாடினார்.

நிருபர்: பலாலி விமானநிலையத்தை பயங்கரவாதிகள் தாக்கிக் கைப்பற்றி விட்டார்கள் என்ற ஒரு வதந்தி பரவியுள்ளது. இதில் ஏதாவது உண்மையிருக்கிறதா?

அரசாங்க அதிபர்: அந்தக் கதையில்ஒருஉண்மையுமில்லை. யாழ்ப்பாணத்தில் இருக்கிற இராணுவ தலைவர்களுடன் பேசியிருக்கின்றேன். யாழ்ப்பாணத்தில் ஒரு இராணுவ, விமானப்படை நிலையங்களையும், ஒரு பயங்கரவாதியும் தாக்கவில்லை.

நிருபர்: வேறு ஏதாவது ஸ்தாபனங்களையோ அல்லது கட்டடங்களையோ இவர்கள் தாக்கியிருக்கிறார்களா?

அரசாங்க அதிபர்: ஒருகட்டடங்களையும், ஸ்தாபனங்களையும், பொதுக்கட்டடங்களையும், ஸ்தாபனங்களையும் பயங்கரவாதிகள் அழிக்கவில்லை. வேறு சிங்களமக்களையும் பயங்கரவாதிகள் தாக்கவில்லை.

நிருபர்: யாழ்ப்பாணத்தில் பொதுவாக நிலைமை எப்படியிருக்கிறது?

அரசாங்க அதிபர்: யாழ்ப்பாணத்தில் இப்போதுநிலைமை அமைதியாக இருக்கிறது. இப்போதைக்கு ஒரு கஷ்ட நிலை, பயங்கரவாத நிலைமை இங்கு இல்லை.

## "பலாலி விமான நிலையம் தாக்கப்பட்டது" "கொழும்பு குழாய் நீரில் நஞ்சு" என்ற வதந்திகளில் உண்மையில்லை!

(கொழும்பு)

பலாலி விமான நிலையம் பாயங்கரவாதிகளால் தாக்கப்பட்டுள்ளதென்றும், கொழும்பு குழாய் நீரில் நஞ்சு கலக்கப்பட்டதாகவும் பரப்பப்பட்ட வதந்திகளில் உண்மை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வதந்திகளை நம்பவேண்டாமென மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் வன்செயலைத் தூண்டிவிடும் நோக்கத்துடன் சில தீயசக்திகள் யாழ்ப்பாணத்தில் நிலைமை சீராகவில்லை என்ற வதந்தியைப் பரப்பியுள்ளார்கள்

இந்த வதந்தியில் உண்மை எதுவும் கிடையாது என ராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ அல்விஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை இராணுவத்தினர்மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலின்பின்னர் பயங்கரவாத செயல்கள் இடம்பெறவில்லை, இச்சம்பவத்தையடுத்து இராணுவத்தினரோ, பொலிசாரோ பயங்கரவாதிக்ளால் தாக்கப்படவில்லை.

நாட்டின் எந்தப் பகுதியிலாவது கோவில்களோ, தேவாலயங்களோ, விகாரைகளோ, பள்ளிவாசல்களோ தாக்குதலுக்குள்ளாகப்படவில்லை.

அத்தியாவசிப் பொருட்கள் விநியோகத்திற்கு தடங்கல் ஏற்படுத்தும் நோக்கத்துடன் குறுகிய அரசியல் எண்ணங்கொண்ட தீயசக்திகள் இந்த வதந்திகளை பரப்புவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதிகளால் பலாலி விமான நிலையம் தாக்கப்பட்டுள்ளது என்ற வதந்தி பரப்பப்பட்டுள்ளது, இந்த வதந்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் யாழ்ப்பாணத்தில்பூரண அமைதிநிலவுவதாகவும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குத் தெரிவித்துவுள்ளார்.

கொழும்பு, மாநகரசபை பகுதிக்கு விநியோகிக்கப்படும் நீரில் நஞ்சுகலக்கப்பட்டுள்ளதென்ற வதந்தியும்பரப்பப்பட்டுள்ளது இந்த வதந்தியிலும் உண்மையில்லை.

பொய்யான வதந்திகளை நம்பி கலவரமடையாதிருக்கும்படி பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

கொழும்பு மாநகருக்கும், அதன் சுற்றுப்புறங்களுக்கும் நீர்விநியோகம் பயன்படுத்தப்படும் சகல நீர்த்தேக்கங்களிலும், நேற்றுமுன்தினம் இரவு அவசரமவசரமாகபகுப் பாய்வு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

கொழும்புக்கும், அதன் சுற்றுப்புறத்திற்கும் குழாய்மூலம் விநியோகிக்கப்படும். நீர் தூய்மையாகவே இருப்பதாகவும் எவரும் அதனை அச்சமின்றிபருகலாமென்றும் மாநகரசபை அதிகாரிகள் திட்டவட்டமாக கூறியுள்ளனர்.

## திருமலையில் 150 கடற்படை வீரர் கைது!

(திருகோணமலை)

திருகோணமலையில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களைத் தொடர்ந்து 150 கடற்படை வீரர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## நடமாடும் விற்பனை நிலையம்

(கொழும்பு)

கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய இடங்களில் அத்தியாவசிய பொருட்களின் விற்பனை, நடமாடும் விற்பனை நிலையங்களில் நடைபெற்றன. மக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்கினார்கள்.

### கண்டியில்

## அலுவலகங்கள் மூடப்பட்டன

(கண்டி)

கண்டி நகரில் அரசு நிறுவனங்களும் கூட்டுத்தாபனங்களும், தனியார் நிறுவனங்களும் கடந்த வியாழன் வெள்ளி இரு தினங்களும் மூடப்பட்டிருந்தன.

## வேலைகள் நடக்கவில்லை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அலுவலகங்களில் நேற்று ஊழியர்கள் மிக குறைவாகவே வந்திருந்தனர்.

அலுவலங்களில் வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. ஊழியர்கள் வந்த கையுடனே திரும்பிவிட்டார்கள்.


வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-30
சிவகுமார்-சரிதா
வண்டிச்சக்கரம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 1-30, 6-15
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

மனோகரா (யாழ். நகர்.)
தினசரி 3 காட்சிகள்
ரஜனிகாந்த்-ஸ்ரீவித்யா
பொல்லாதவன்

ராஜா (யாழ்நகர்)
படம் பார்ப்பவர்களின் வசதியை முன்னிட்டு காட்சி நேரங்கள் பின்வருமாறு:-
10-30, 1-30, 6-00
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம் நடித்த
அந்த 7 நாட்கள்
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன் பாக்கியராஜ்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30. 6-30, 9-30
பிரதாப்— சோபா
மூடுபனி

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்
முரட்டுக் காளை

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-00
(யாழ்ப்பாணம்)
விஜயன் - சத்தியகலா
த னி ம ர ம்

ராணி தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஜெய்கணேஷ் - லதா - நாகேஷ்
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(கலர்-புதியபிரதி)
விரைவில் வருகிறது
ஆனந்தராகம்





உங்கள் உணவிற்குள் சிறிதளவு அஜி-நொ-மோட்டோ தூவுங்கள்!




நீங்கள் சமைப்பது இறைச்சிக் கறியாக இருக்கலாம், மரக்கறியாக இருக்கலாம் அல்லது சாதாரண தேங்காய்ச் சம்பலாகவும் இருக்கலாம். சோறு, பொரியல், அவியல், கஞ்சி அல்லது எதுவாகவும் இருக்கலாம். உங்கள் சமையல் எதுவாக இருந்தாலும் சிறிதளவு அஜி நொ மோட்டோவைத் தூவி உணவின் இயற்கைச் சுவையைப் பெருக்குங்கள். கரும்பு, பீட்றூட், மரவள்ளி முதலியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து எடுக்கப்படும் அஜி நொ மோட்டோவை உலகெங்கிலும் 80 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாவிக்கிறார்கள்.

சந்தைப்படுத்துவோர்:
கேவ்ஸ் சந்தைபபடுத்தும் பிரிவு
விலை: ரூ. 1/20 லிருந்து

அஜி-நொ-மோட்டோ
உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது.

Grant K & E 4692

# பதட்டம் நிலவும் இடங்களில் வாழும் மக்கள் அகதிகள் முகாமிற்கு செல்வதே மேலானது

(கொழும்பு)

பாதிக்கப்பட்ட மக்களும், பதட்டம் தொடர்ந்து நிலவும் இடங்களிலுள்ள மக்களும் அகதிகள் முகாம்களுக்குச் சென்று தங்கியிருப்பதே மேலானது என்று ஆலோசனை கூறப்படுகிறது.

கொழும்பு மாவட்டத்திலும் களுத்துறை பகுதியிலும், வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புகலிடம் அளிப்பதற்கு பல முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முகாம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், உணவு முதலிய அத்தியாவசிய சேவைகளை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதால் பாதிக்கப்பட்ட மக்கள் உடனடியாக முகாம்களுக்குச் செல்லுமாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில்பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் ஏற்கனவே இந்தஅகதிகள் முகாம்களுக்குச் சென்று தங்கியுள்ளனர். இவர்கள் அனைவரும் பாதுகாப்பாகஇருக்கிறார்கள். (க)

## ஊரடங்கு இல்லாத நேரத்தில் கூட்டுறவு கடைகளும், மொத்த விற்பனை நிலையமும் திறந்திருக்கும்

(கொழும்பு)

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்திற்காக கூட்டுறவு கடைகள், மொத்தவிற்பனவு நிலையங்கள் ஊரடங்குஅமுலில் இல்லாதநேரத்தில் திறந்திருக்கும்.

கடந்த வியாழன், வெள்ளி இரு தினங்களும் ப. நோ. கூ. சங்கங்கள் மொத்த விற்பனை நிலையங்கள் திறந்திருந்தன. மக்கள் கியூவில் நின்று தங்கள் பாவனைப் பொருட்களை பெற்றுக்கொண்டார்கள்.

மா, அரிசி, சீனி போன்ற பாவனைப்பொருட்கள் போதியளவு கூட்டுறவுக் கடைகளில் காணப்பட்டது. (க)

## சிகரெட் தட்டுப்பாடு

(சுண்டிக்குளி)

யாழ். நகரில் சிகரெட்டுக்கு நீண்ட கியூவரிசை காணப்படுகிறது. சில இடங்களில் ஒரு ரூபா வீதம் சிகரெட் விற்கப்படுகிறது!

## கண்டியில் 7 அகதிகள் முகாம்கள்

(கண்டி)

கண்டியில் 7 அகதிகள் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்து கலாச்சார நிலையமும் இதில் ஒன்றாகும். அகதிகள் முகாம்களுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் பாதிக்கப்பட்டவர்களும் அச்சமடைந்துள்ளவர்களும் முகாமிற்குவந்துள்ளனர். (க)

## பெண் சாரணர் சங்கம் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை பெண் சாரணர் சங்கம் அதன் அங்கத்தவர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் விடுத்துள்ள வேண்டுகோளில், அத்தியாவசிய பொருட்களைச் சேகரித்துக் கொடுக்குமாறு கேட்டுள்ளனர். (க)

## ஊரடங்குச் சட்ட நேரங்களில் மாற்றம்!

(கொழும்பு)

நேற்று வெள்ளிக்கிழமை காலை 5 மணிக்கு தளர்த்தப்பட்ட ஊரடங்கு மாலை 5 மணிக்கு மீண்டும் அமுல்செய்யப்பட்டு சனிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்பட்டது.

முன்னர் சனியும், ஞாயிறும் முழுநாளும் உட்பட 63 மணி நேரம் ஊரடங்கு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

மக்கள் தங்கள் அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்வதற்காகவே ஊரடங்கு சட்டநேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக் அறிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை எப்பொழுது ஊரடங்கு மீண்டும் அமுலுக்கு வரும் என்பது பற்றி அறிவிக்கப்படவில்லை.

## அகதிகள் முகாமிற்கு மின் வெளிச்சம்

[கொழும்பு]

கொழும்பிலுள்ள அகதிகள் முகாம்களுக்குப் போதிய மின் வெளிச்சம் அளிக்கப்பட்டுள்ளது,

சகல பிரதான மின்சார உற்பத்தி நிலையங்களும், உப மின்சார உற்பத்தி நிலையங்களும் வழமைபோல் இயங்குகின்றன.

மின்சார விநியோகத்தைத் தடையின்றி வழங்குவதற்காக ஊழியர்கள் இரவு பகலாக வேலை செய்து வருகின்றார்கள்.

## கொழும்பு ஆஸ்பத்திரியில் வழமையான சத்திரசிகிச்சைகள் ரத்து

(கொழும்பு)

வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு கொழும்பு பெரியாஸ்பத்திரியில் வழமையான சத்திரசிகிச்சைகள் அனைத்தும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கான சத்திரசிகிச்சைகள் அனைத்தும், கொழும்பு பெரியாஸ்பத்திரியிலேயே மேற்கொள்ளப்படும்,

சத்திரசிகிச்சைக்காக, கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ள பாதிக்கப்பட்டவர்களுக்கு பூரண பாதுகாப்பு வழங்கப்படும். (க)

## பேக்கரிகளுக்கு சீனி, மா வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதை தவிர்க்க அரசு துரித நடவடிக்கை எடுத்துள்ளது.

உணவு களஞ்சிய சாலையிலிருந்து அத்தியாவசிய உணவு பொருட்களை நாட்டின் பல பகுதிகளிலுள்ள பல நோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பபப்படுகின்றன.

ஊரடங்குச் சட்டம் இல்லாத நேரங்களில் ப. நோ. கூ. சங்கங்களை மக்கள் அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கு திறந்து வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

பேக்கரிகளுக்கு தேவையான சீனி, மா ஆகியவற்றை வழங்குமாறு ப. நோ. கூ. சங்கங்களுக்கு பணிக்கப்பட்டுள்ளது,


## மரண அறிவித்தல்
## தில்லையம்பலம் கந்தசாமி

(வில்வளைக் கந்தன்)

தில்லையம்பலம் கந்தசாமி அகால மரணமானார். இவர் மாதகல் நாவலர் வீதியைச் சேர்ந்தவரும் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பாதுகாப்பு ஊழியரும், தில்லையம்பலம் காலஞ்சென்ற லட்சுமி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரரும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிறிபிரபாகரன், சிறிபிரியா, சிறி கல்யாணி ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜேஸ்வரி, செல்வராணி, யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரஸ்வதி, சிவபாலசுப்பிரமணியம் (கணக்காளர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பூநகரி), சிங்கராசா, விநாயகமூர்த்தி (துறைமுகக் கூட்டுத்தாபனம் திருகோணமலை), சிவசோதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். இவர் 24-7-83இல் அகாலமரணமானார். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

8095


## வத்திக்கான்தூதர் காலமானர்

(ரோம்)

இலங்கையில் முன்னர் வத்திக்கான் தூதுவராக கடமையாற்றிய கருதினல் யேம்ஸ் நொக்ஸ் ரோமில் காலமானர்.

## கொழும்பில் அகதிகள் முகாம்களுக்கு பிரதமர் நேரில் விஜயம்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அகதிகள் முகாம்களுக்குப் பிரதமர் ஆர். பிரேமதாசா நேரில் விஜயம் செய்தார்.

இந்த அகதிகள் முகாம்களில், சுமார் 20,000 குடும்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அகதிகள் நலனுக்காக எடுக்கப்படும், நடவடிக்கைகளைப் பிரதமர் அவதானித்தார்.

முகாம்களில் தங்கியிருக்கும் அகதிக்ளுக்கு எடுக்கப்படும்நடவடிக்கைகளுக்கு இயன்றளவு உதவி செய்யும்படி சர்வோதயத் தலைவர் கலாநிதி ஆரியரத்ன கேட்டுள்ளார். (க)

## இன்றைய பலன்

ஆடி 14ம் திகதி
சனிக்கிழமை
(30—7—83)

மேடம்: மேடைப் பேச்சாளர் பெரும்புகழ் அடைவீர் நாடகக் கலைஞர்களுக்கு நன்மையான தினம். இனபந்துக்களின் கொண்டாட்டங்களுக்கும் இடம் உண்டு.

இடபம்; ஆத்திரப் படுவதன்மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும் மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கக்கூடும். அயலவர்களுடன் அன்பாக நடந்து கொள்ளவும்.

மிதுனம்:- புதிய நம்பிக்கையுடன் வாழ்க்கையை ஆரம்பிப்பீர்கள் தெய்வத்தின் அருள் கிடைக்கும். தங்கள் செயற்திறமை மற்றவர்களைத் திகைக்க வைக்கும் வாகன விருத்தியுண்டு.

கடகம்:- செய் தொழிலால் சிறப்புக் கிடைக்கும் வழக்கு விவகாரங்களில் வெற்றி உண்டு வெளியிடத்தில் இருந்து மகிழ்ச்சியைத் தேடித்தரும் செய்தி கிடைக்கும்.

சிங்கம்: வேவுகணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பார்கள். மேலதிகாரியின் கண்டிப்புக்கு இலக்காகலாம். அபாயகரமான தொழில்களில் ஈடுபடுவோர்கள் கவனம்வேண்டும்.

கன்னி: கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி இடம் பெறும். எதிர்ப்புக்கள் மறைந்து எதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும். கண்ணியம் சேரும்.

துலாம்: ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறு ஒன்றாக அமையும், வந்து சேரவேண்டிய பணத்தில் மீண்டும் தடை ஏற்படலாம், திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும்.

விருச்சிகம்: குடும்பவாழ்க்கை இன்று சமமாக இருக்கும், தூரத்து உறவினர் ஒருவர் உங்களுடன் ஒத்துழைப்பதற்கு முன்வருவார்கள், டாக்டர்களுக்கு பயன்உள்ள தொடர்பு பெருகும்.

தனு: தொழில்துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் நண்பர்கள்மூலம் புதிய மாற்றங்கள் பயன் தரும்.

மகரம்: வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்களுக்கு இடமுண்டு முயற்சிகள் இன்று கைகூடும் மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டு.

கும்பம்: வாழ்க்கையில் மந்தநிலை நடைபெறும் எதிர்பாராத தடைகளால் முன்னேற்றம் தடைப்படும் சகோதர வழிமூலம் சஞ்சலமான செய்தி கிடைக்கும் உறுதியுடன் இருக்கவும்.

மீனம்: நினைவின் நிழல் ஆட்டம் நிம்மதியைச் சிறகடிக்க வைக்கும் உறவினர் மத்தியில் பிரிவு உருவாகும் அன்னியரின் தொடர்பினுல் வாழ்க்கை பாதிப்படையும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
**க. வேலுப்பிள்ளை**

## வருடாந்த உற்சவம்

(சுண்டிக்குளி)

யாழ்-குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருநாள் மிகசிறப்பாக நடைபெற்றது, யாழ். ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை திருநாள் பூசை நிறைவேற்றினர். திருச்சொரூப தேர்பவனியும் மிக அமைதியாக நடைபெற்றது.

## ஆங்கில தினவிழா

(பரந்தன்)

கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரியில் ஆங்கில தினவிழா அதிபர் செல்வி ராதா சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக யாழ். திணைக்கள கல்வி அதிகாரி செல்வி நவரத்தினசிங்கம் கலந்துகொண்டு உரையாற்றுகையில்இங்குநடைபெற்றபோட்டிகள் சிறப்பாக அமைந்திருந்தன என்றும் அவற்றைத் திறம்பட தயார்செய்த ஆங்கில போதனுசிரியர்களும் அதிபரும் பாராட்டுக்குரியவர்களென்றும் தெரிவித்தார். (அ)

## அகதிகளை கப்பலில் அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பு முகாம்களில் தற்போது தங்கியிருக்கும் அகதிகளில் சொந்த ஊர்களுக்குச் செல்லவிரும்பும் அகதிகளைக் கப்பலில் அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்யப்படுவ தாகத் தெரியவருகிறது.

## தொழில்நுட்பக் கல்லூரி பரீட்சைகள் ரத்து

(கொழும்பு)

தொழில்நுட்பக் கல்லூரியின் பரீட்சைகளும், நேர்முகப் பரீட்சைகளும் ரத்துச்செய்யப்பட்டுள்ளன. (க)

## தென்மாகாணத்தில் தமிழர் வாழும் பகுதிகளுக்கு பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

தென்மாகாணத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற சகல பகுதிகளுக்கும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தென்பிராந்திய பிரதிபொலிஸ் மாஅதிபர் திரு. ஏனுஸ் பெரேரா பணித்துள்ளார். (க)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.